Acc. NO.
5653.
Kovilloor Digital Library



3 ஸ்ரீ

:: தெய்விகத் தீர்க்கதரிசி ::

ஸ்ரீ ஸாயி பாபா

1. பாபா இந்துவா? முஸ்லிமா?



'ஸாயி பாபா.' இதென்ன பெயர்? விநோதமா யிருக்கிறதே! இவர் என்ன முஸ்லிமா? இல்லை ;—ஆம். இதென்ன மழுப்பலாகப் பதிலளிக்கிறீர்கள்! இவர் முஸ்லிம் என்றால் ஆம் என்று கூற வேண்டும்; முஸ்லிமல்லாதவரா யிருந்தால், இல்லை என்று சொல்லவேண்டும். அதை விட்டு 'இல்லை, ஆம்' என்று மழுப்புவானேன்! இவ்விதஞ் சொல்வதன் அர்த்தமென்ன? ஸாயி பாபா முஸ்லிமா? அல்லது இந்துவா? என்று பகுத்துப் பார்க்க முடியாத நிலையி லிருப்பதே இவ்விரண்டுமற்ற பதிலுக்குக் காரணம். ஸாயி பாபா என்ற பெயரைக் கேட்டால், இது ஒரு சாயபுவின் அதாவது முஸல்மானின் பெயர்போலக் காணப்படுகிறதே என்றே தோன்றும். அத்துடன், அவர் பிறப்பும் வளர்ப்பும், வாழ்க்கையும் இவரை இந்து வென்று சொல்லுவதா! அல்லது முஸ்லிம் என்று கூறுவதா? என நிர்ணயிக்க முடியவில்லை.

ஸாயி பாபா ஒரு பிராம்மணக் குடும்பத்தில் உதித்தார். ஆனால், இளமையில் அவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பக்கிரியால் வளர்க்கப்பட்டார். ஆகவே, அவர் தோற்றத்தில், கொள்கையில், பேச்சில்,

Koviloor Digital Library

நடையுடை பாவனைகளில் இந்து சமயக் கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் இஸ்லாம் மதக் கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் கலந்து காணப்படுகின்றன. ஆகவே, ஸாயி பாபாவை இந்துக்களும் 'எங்களவர்' என்று உறவு கொண்டாடுகின்றனர். முஸ்லிம்களும் 'எங்களைச் சேர்ந்தவர்' என்று உரிமை பாராட்டுகின்றனர். அவர் இருக்கும் இருப்பிடம் இந்துக்களுக்கும் தேவாலயமாகத் திகழ்கிறது. முஸ்லிம்களுக்கும் மசூதியாக விளங்குகிறது. மேலும், அவர் தமது ஆத்ம விசாரணையினால், கடவுள் தியானத்தினால், பக்தி பலத்தினால் சராசரி மனித வாழ்வைக் கடந்த ஒரு உயர்ந்த தெய்வ நிலையை யடைந்து விட்டார்; சாதாரணமாக, மனித சமுதாயத்தில் நிலவி வரும் சாதி, சமய வேற்றுமை முதலியவைகளைக் கடந்த பேதமற்ற எல்லையை அடைந்து விட்டார். இவ்வித உன்னத ஞான நிலையில் உள்ள ஒருவரை நாம் லௌகிகக் கண் கொண்டு, சமுதாய சார்பிலிருந்து இவர் இந்துவென்றோ, முஸ்லிமென்றோ எவ்விதஞ் சொல்ல முடியும்? பாரமார்த்திகப் பார்வை கொண்டு பார்த்தால்தான், அப்பரம ஞானியின் பிறப்பு விசேஷம், உயர்தகுதி, சிறப்பியல்புகள், சிறந்த கொள்கைகளை நாம் ஒருவாறு அறிய முடியும்.

ஸாயி பாபாவின் வாழ்க்கை வரலாற்றைக் கவனித்தால், அம்மகானது கொள்கைகளைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால், அவர் நம் நாட்டில் நிலவிவரும் இந்து-முஸ்லிம் என்ற பெரும் பிரிவைப் போக்கவென்றே வந்தவரோ என்று எண்ணி அதிசயிக்க வேண்டியதாக இருக்கிறது. நம் பாரத தேசத்தில் இந்து சமயம், இஸ்லாம் மதம் என்ற சமயங்களின் பெயரால், ஏக குடும்பமாக இருக்க வேண்டிய இந்திய மக்கள் இந்து, முஸ்லிம் என்ற இரு பெரும் சமூகங்களாக—வகுப்புகளாகப் —பிரிக்கப்பட்டு இருந்து வருவதும், இச் சமய, சமூக வேற்றுமை அவர்களைப் பல வகையாக அலக்கழித்துப் போரையும் பூசலையும் உண்டாக்கி வருவதும் நாம் கண்கூடாகக் கண்டு வருவதொன்று. இவ்விந்து முஸ்லிம் வேற்றுமையை ஒழிக்க, மதத் தலைவர்களும் தேசியத் தலைவர்களும் பெரும்

Koviloor Digital Library

பாடுபட்டு வருகிறார்கள். இங்ஙிலையில், ஸாயி பாபா செய்துள்ள அரும்பெருஞ் செயல்கள், சமய, சமூகப் பிரிவுகளால் பேதலித்து வரும் இந்து முஸ்லிம் சமூகங்களை வேற்றுமை யுணர்ச்சிவிட்டு ஒற்றுமைப் படும்படி - ஐக்கியமாகும்படி செய்யக்கூடியனவாக இருக்கின்றன. ஏன்? ஐக்கியப்படும்படி செய்து விட்டன என்றுஞ் சொல்லலாம். இவ்விதம் சமய, சமூக வேற்றுமை யுணர்ச்சிகளால் புலியும் ஆடும் போல் துவேஷம் பாராட்டி வரும் இந்து முஸ்லிம்களிடையே ஐக்கிய பாவம் ஏற்படும்படிச் செய்த பெரியாரை இந்துவென்றும் சொல்லலாம்; முஸ்லிம் என்றும் கூறலாம். ஏன்? இந்து முஸ்லிம் என்று அவரைச் சொல்லக்கூடாது?

ஸாயி பாபா பத்ஹாவாவை (பாதிஹா) ஓதிக்கொண்டே முகம்மதியர்கள் 'திருக்குரான்' ஓதுவதைச் சிரத்தையோடு கேட்பார். இந்துக்களுக்கு அவர் இராம மந்திரத்தை உபதேசிப்பார்; கீதா இரகசியத்தை விளக்குவார். ஷிர்டியில் அப்பெரியார் இருக்கும் சமஸ்தானத்தில் முஸ்லிம்கள் தொழுகையை நடத்தி வரும் 'மிம்பர்' இருக்கிறது. பாரஸீகர்களும் இந்துக்களும் வழிபடும் ஓம குண்டமும் இருக்கிறது. மகா பரிசுத்தமான ஒரு பிருந்தாவனமும் இருக்கிறது. ஆகவேதான், அங்கு ஒரு பக்கம் முஸ்லிம்களும் மற்றொரு பக்கம் இந்துக்களும் வந்து ஆண்டவனைத் தொழுது வருகிறார்கள். ஒருபுறம் இந்துக்கள் புராண இதிகாசங்களைப் பாராயணஞ் செய்து வருகிறார்கள். மற்றொருபுறம் முகம்மதியர்கள் திருக்குரானை ஓதி வருகின்றனர். ஒரு புறத்தில் இந்து ஆலயங்களில் வாசிக்கப்படுவது போல, பேரி, மேளவாத்தியங்கள் முழங்கிக்கொண்டும், மற்றொரு புறம் முஸ்லிம்கள் "அல்லாஹு அக்பர்" என்று உரத்த குரலில் கூவி அனைவரையும் தொழுகைக்கு அழைத்துக்கொண்டுமிருப்பார்கள். இவ்விதப் பேதமற்ற நிலையினால் ஸாயி பாபா இருக்கும் மசூதிக்குப் "பிராம்மணர் மசூதி" என்றும் "துவாரகா மாயி" என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இப்பெயர்களை முதலில் பாபாவே இட்டதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

ஸாயி பாபா இந்து மதத்தைச் சேர்ந்தவரா? இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவரா? என்றால், எந்த மதத்தையுஞ் சேர்ந்தவரல்ல வென்றே சொல்ல வேண்டும். இன்னுங் கேட்டால் அவர் சகல மதங்களையுஞ் சேர்ந்தவர்; அவருக்கு எம்மதமுஞ் சம்மதம் என்றுங் கூறலாம். 'எங்கள் இந்து மதந்தான் சிறந்தது.' 'இல்லையில்லை; எங்கள் இஸ்லாம் மதந்தான் உயர்ந்தது' என்று கூறி வாது புரியும் எல்லா மதங்களுக்கும் மேற்பட்டவர்; எல்லா மதத் தத்துவங்களையுங் கடந்து நிற்பவர் என்று கூறினாலும் பொருந்தும். ஆகையினால்தான், பாபா இந்து மதத்தையும் இஸ்லாம் மதத்தையும பிற மதங்களையும் சம நோக்கோடு பார்த்து பாராட்டி வருகிறார். 'ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு யாரும் மாறக்கூடாது; ஒவ்வொருவனும் அவனவனுக்கு இயற்கையா யமைந்த மதத்திலேயே நிலைத்திருத்தல் வேண்டும்' என்று பாபா வற்புறுத்தி வருகிறார்.

ஸாயி பாபாவுக்குத் தம்முடைய மதம் என்று சொல்லிக்கொள்ளக் கூடியதொன்று உண்டு என்றால்— பற்று வைத்திருப்பதென்று ஒன்று உண்டு என்றால், அது அன்பு என்ற மதந்தான். 'அன்பே சமயம்; அன்பே கடவுள்; அன்பே அனைத்தும்' என்று பாபா எண்ணி அன்புமயமாய் யாவற்றையும் பார்த்து வருகிறார். 'இந்த அன்பு மதம் எல்லா மக்களும் கடைப்பிடித்து ஒழுகக் கூடியது. கடவுளால் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளும் அனுபவித்து இன்புறக் கூடியது. அன்புளங் கொண்டால் ஞானம் தானாகக் கனியும்' என்பது அவர் கருத்து. 'இதன் முடிவு சகுணமானதோ நிர்க்குணமானதோ, உருவமுள்ளதோ உருவமற்றதோ என்று சொல்ல முடியாவிட்டாலும், கடவுளைச் சேர்வது என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை' என்று திடமான நம்பிக்கை பாபா கொண்டிருக்கிறார்.

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

Koviloor Digital Library

RAMNAD Dt. 10-1

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே".

என்று திருமூல தேவர் அருளியுள்ள திருமந்திர வாக்கே ஸாயி பாபாவின் திருவாக்குமாகும்.

"என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்"!

என்பதுதான் ஸாயி பாபாவின் மூலமந்திரம். அதைவிட்டு "என்பே (எலும்பே) விறகாக இறைச்சி அறுத்திட்டுப் பொன்போற் கனலிற் பொறிய வறுப்பினும்' எவ்விதக் கொடிய தவம் புரிந்தாலும் முக்தி கிட்டாது; முதல்வனை அடையமுடியாது. அன்போடு உருகி அகங் குழைவார்க் குத்தான் ஆண்டவன் அருள்புரிவான்" என்பதுதான் ஸாயி பாபாவின் சித்தாந்தம்.

இத்தகைய அன்பு மதத்தை அழுத்தமாக மேற் கொண்டதனுல்தான் ஸாயி பாபா மெய்ஞ்ஞானியான தோடு, தெய்வ நிலையையும் அடைந்தார். சாதி சமய பேதமற்று சகலரும் வழிபடும் உன்னத நிலையை எய்தி னுர். அன்பினுல் அகிலத்தை யெல்லாம் தன் வசமாக்கி னுர். உலகமே அவரது சிற்றடியின் கீழ்க் கிடக்கிறது.

2. குருபக்தியும் அஷ்டமாசித்தியும்

அன்புருவான ஸாயி பாபாவின் பிறப்பிடம் பத்ரீ என்னும் ஒரு சிறு கிராமம். அது பம்பாய் மாகாணத்தில் நிஜாம் சமஸ்தானத்தில் இருக்கிறது. இவர் ஒரு பிராம் மண குலத்தில் உதித்ததாகத் தெரிகிறது. ஆனுல் இவ ரது தாய் தந்தையர் யாரெனத் தெரியவில்லை. இவருக்கு உடன் பிறந்தார் உண்டா என்பதும் அறியமுடியவில்லை. குழந்தைப் பருவத்தில் அவர் முகம்மதியப் பக்கிரி யொருவர்பால் விடப்பட்டாராம். சில்லாண்டுகளுக்குப் பின்னர் அவர் சேலு கிராமத்தில் வாழ்ந்து வந்த கோபால ராவ் தேசமுக் என்றும் வெங்கடேச குரு என்றும் வழங் கப்பெற்ற ஒரு பிராம்மணப் பெரியாரிடம் ஒப்புவிக்கப் பட்டாராம்.

Koviloor Digital Library

இவ்விதமாக வளர்ந்து வந்த ஸாயி பாபா இளமையிலிருந்தே தம் குருவுக்கு உண்மையன்புடன் தொண்டு புரிந்துவந்தார். இதன் பயனாக, அவர் வெகு விரைவிலேயே குரு தேவரின் பரிபூரண அருளைப் பெற்று, பக்தி, ஞானம், வைராக்கியம் முதலியவைகள் கைவரப் பெற்றார். அன்பு மதத்தை மேற்கொண்டு, அவர் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு தூர்க்குணங்களையும் அறவே விட்டு உள்ளத் தூய்மை யடைந்தார்.

இங்ஙனம், மன பரிபக்குவம் பெற்று இறைவன் திருவருள் பெறுவதற்குள்ளாகவே, ஸாயி பாபாவுக்கு அஷ்டமா சித்திகளும் கைகூடின. இவருக்கு இச்சித்திகளில் இச்சையும் முயற்சியும் ஒரு சிறிதும் இல்லாதிருக்கையிலேயே இவ்விதம் வந்து வாய்த்தது வியப்புறத்தக்கதேயாம். ஆனால், பாபா இந்த அஷ்டமாசித்திகளை வெகு துச்சமாக நினைத்து உதறித் தள்ளினார். வேறு யாருக்காயினும் பாபாவுக்குக் கிடைத்தது போன்ற பிரமிக்கத்தக்க சித்திகள் கிடைத்திருக்குமாயின், அவர்கள் அவற்றைக் கொண்டு பல சித்திகளைப் புரிந்து உலகையே பிரமிக்கச் செய்துவிட்டிருப்பார்கள். அவர்கள் தாங்களே உலகைப் படைத்துக் காத்து அழிக்கவல்ல இறைவன் என்று கருதி இறுமாந்து போயிருப்பார்கள். நம் பாபாவோ தமக்கு எளிதாக வந்து வாய்த்த சித்திகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், குரு பக்தியிலும் கடவுள் பக்தியிலும் கவனத்தை அதிகமாகச் செலுத்தி வரலானார். இவ்வஷ்டமா சித்திகள் மிகக் கீழ்த்தரமான சக்திகளென்றும், இவைகளால் கடவுள் திருவடியை அடைய முடியாதென்றும், இவை உயர் ஞான நிலைக்குச் செல்லும் ஒருவனுக்கு அற்ப ஆசை காட்டித் தடைப்படுத்தக் கூடியவை என்றுங் கருதி, அவர் ஹரி நாம சங்கீர்த்தனத்திலேயே மனதை அழுந்தச்செய்து வந்தார்.

ஸாயி பாபாவுக்குக் குருவாக வாய்த்த மகான் இவரது இளமை முதிராப் பருவத்திலேயே இம்மண்ணுலகப்

Koviloor Digital Library

பொய் வாழ்வை விட்டுச் சென்றார். ஆகவே, பாபாவுக்கு உற்ற துணையாக இவ்வுலகில் ஒருவருமில்லை. இறைவன் ஏகனாயிருப்பதுபோல் இவரும் ஏகமானார். ஆகவே, இவர் இது வரை தங்கியிருந்த விடத்தை விட்டுக் கிளம்பிப் பக்கிரிபோல் ஊர் ஊராகத் திரியலானார்.

"ஊரேலாம் அட்ட சோறு நம்மதே ; உவரி சூழ்ந்த
பாரேலாம் ப்ாயல் ; துன்னற் கோவணம் பரிக்கும் ஆடை"

என்ற மனோபாவத்தோடு, இதற்கு முன் கனவிலுங் கண்டறியா இடங்களை யெல்லாம் சுற்றி வந்தார். பசியேற்படும்போது வீடுதோறும் போய்ப் பிச்சை கேட்பார். யாராகிலும் அன்னமிட்டால் உண்பார்; இல்லையானால் பட்டினி கிடப்பார். களைப்பு ஏற்படுகையில் வேப்ப மரங்களின் அடியிலும் மசூதிகளிலும் படுத்து உறங்குவார். அவர் தேகத்தைக் கந்தை சட்டைதான் மறைத்திருக்கும். ஆனால் அவரது நா மட்டும் சதா ஹரிநாம ஸ்மரணை செய்து கொண்டிருக்கும்.

ஸாயி பாபா இவ்விதம் சுற்றித் திரிந்து தமது பதினாறுவது வயதில் ஷிர்டி என்ற கிராமத்தை யடைந்தார். இருபதாவது வயதில் இதையே தமது இருப்பிடமாகக் கொண்டுவிட்டார். அதுவரை இவர் ஓரிடத்திலும் நில்லாது அலைந்துகொண்டுதா னிருந்தார்.

"ஒருத்தனே ! உனை உலகெலாம் தேடியுங் காணேன் !" என்று மாணிக்க வாசக சுவாமிகள் அரற்றியதுபோல், பாபாவும் இறைவனைக் கண்டறிய உலகெலாம் சுற்றிக் கொண்டிருந்தார் போலும் !

பாபா இயற்கையிலேயே சுற்றமும் தொடர்பும் அற்றவரானார். அவர் அக்குடும்பப் பந்தத்தை நீக்க வேண்டிய நிலையி லில்லாதது அதிர்ஷ்ட வசமேயாகும். விருப்பு வெறுப்பு அற்ற நிலையை அவர் சாதனத்தால் பெற்றதால், இன்ப துன்ப உணர்ச்சியும் இல்லாதவரானார். தேகப் பற்றையும் விட்டதால், மானாபி மானத்தை அவர் கைவிட்டார். வெறுக்கை (சோறு) மேல் அவர் வெறுக்கை

Koviloor Digital Library

(வெறுப்பு) வைத்தார். செற்றமும் செருக்கும் காய்ந்தார். தீவினை இரண்டுந் தீர்த்துக் கொண்டார்.

ஸாயி பாபா பல இடங்களிலுஞ் சுற்றிக் கடைசியாக பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஆமத் நகர் ஜில்லா கோபர்காம் தாலூகாவிலுள்ள ரஹாதா என்ற கிராமத்தை யடைந்தார். அங்கு தங்கியிருந்தபோதுதான், அவர் பாரமார்த்திகத் துறையில் மிகத் தேர்ச்சி பெற்று மெய்ஞ் ஞானங் கைவரப் பெற்றார் என்று தெரிகிறது.

ஸாயி பாபா சாதாரண ஜன சமூகத்தோடு சேருவ தில்லை. இவரைப் போன்று சன்மார்க்கத்தில் சிந்தனை செலுத்தித் தெய்வத் தியானஞ் செய்து வரும் சான்றோர் களுடனேயே இவர் அளவளாவி வருவார். இவர் வெளி முகத்தில் மனத்தையும் அறிவையும் சிதறவிடாது, உள் ளத்திலுள் தேஜோமயமான இறைவனின் திருவுருவத் தைக் கண்டு களித்து, தாமாகவே உரையாடிக்கொண்டும் மகிழ்ந்துகொண்டும் இருந்துவந்தார். இந்நிலையைக் கண்ட பாமர மக்கள் இவரை ஒரு பைத்தியக்காரரென்றே கருத லாயினர். பித்துப் பிடித்த பக்கிரியென்றும் கூறி ஏளனஞ் செய்யலாயினர். நாட்டு மக்கள் பைத்தியக்காரன் என்று எண்ணும்படியாக இருப்பதுதானே மெய்ஞ்ஞானிகளின் லட்சணம்!

ஸாயி பாபாவின் பெருமையும் ஆத்ம சக்தியும் அவ ருடன் பழகி வந்த மஹால்ஸாபதி போன்ற சில சந்நியாசி களுக்குத்தான் தெரியும். 'இவர் குப்பையில் மறைந்து கிடக்கும் மாணிக்கம்' என்றார் ஒரு மகான்.

"ஸாயி பாபா ஒரு பெரிய ராமபக்தர் என்பதை உலக மக்கள் போகப் போகத் தெரிந்துகொள்வார்கள்" என்று அவரது உண்மை நிலையை எடுத்துக் கூறினார் இன் னொருவர்.

3. பிணி போக்கலும் பிள்ளைவரம் அருளலும்

இம் மொழி மெய்ம்மொழி என்பதை ஜன சமூகம் வெகு விரைவில் உணரலாயிற்று. ஸாயி பாபா ஏழைகளுக்

Koviloor Digital Library

கும் நோயாளிகளுக்கும் தம்மாலான உதவி புரிந்து வந்தார். வறுமை, பிணி முதலியவைகளால் பீடிக்கப்பட்ட ஜன சமுதாயத்துக்குச் சேவை புரிவதே கடவுளுக்குத் தொண்டு புரிவதாகும் என்று அவர் கருதி வந்தார். நோயாளிகளுக்கு அவரவர் நோயறிந்து மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்தும் மற்றும் பல உதவிகள் புரிந்தும் வரலானார்.

ஸாயி பாபா மசூதியில் விளக்கு ஏற்றுவதற்குக் கிராம மக்களிடமிருந்து எண்ணெய் கேட்டு வாங்கி வருவார். ஒரு சமயம் அவர் கிராம வாசிகளிடம் எண்ணெய் வாங்கப் போனபோது, அவர்கள், 'எண்ணெய் கிடையாது; போ' என்று கூறிவிட்டனர். பாபா சிறிதும் மனஞ் சோராமல், மசூதிக்குத் திரும்பி வந்து விளக்குகளில் எண்ணெய்க்குப் பதிலாகத் தண்ணீரை விட்டு ஏற்றினார். அவர் நினைத்தபடியே அவரது ஆத்ம சக்தியினால், தண்ணீர் விட்டு ஏற்றப்பட்ட விளக்குகள் இரவெல்லாம் எரியலாயின. இதைக் கண்ணுற்ற கிராம வாசிகள் ஆச்சரியமுற்று, 'இவர் ஒரு பெரிய மகானே' என்று தீர்மானித்தனர். அன்றிருந்து அவர்கள் இவர்பால் பக்தி விநயத்தோடு நடந்து கொள்ளலாயினர்.

இதனிடையே, ஸாயி பாபா ஒரு நாள் 'ஹரே, ஹரி' என்று ஹரிநாமத்தை மனனஞ் செய்து, தியானம் புரிந்து கொண்டிருக்கையில் மகாவிஷ்ணுவின் கருணையும் தரிசனமும் கிடைத்தது. அதிலிருந்து அவர் தம்மை நாடிவரும் நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பதற்குப் பதிலாக, மசூதியில் தீ வளர்த்து வந்த ஓம குண்டத்தினின்றும் சாம்பரான திருநீற்றை வழங்கி வந்தார். இவ்விதம் இவர் அளித்து வந்த விபூதியை நோயாளிகள் வாயில் போட்டுக் கொண்டாலும், உடம்பில் பூசிக்கொண்டாலும் நோய் குணப்பட்டுச் சுகமடைந்து வந்தனர். உடல் நோய் கொண்டவர்கள் மட்டுமன்றி மனநோய் உடையவர்களும், பேய், பிசாசு, பிடித்தவர்களும் பாபா அளிக்கும் திருநீற்றினால் நன்மை யடைந்து வந்தனர். பாபா தம்மை

Koviloor Digital Library

நாடி வருபவர்கள் யாராயினும் சாதி சமய பேதமின்றி அனைவரையும் சமநோக்கோடு பார்த்து அன்புடன் விபூதி வழங்கி வரலானார். பல்லாண்டுகள் வரை பரம ஏழைகளாகி யுள்ளோர் தாம் பாபாவின் ஆத்மசக்தியையும் பெருமையையும் உணர்ந்து அவரை வணங்கி தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்குப் பரிகாரந் தேடி நலமுற்று வந்தனர். செல்வச் சீமான்களும் உயர்தர உத்தியோகஸ்தர்களும் பாபாவின் மகிமையை அறியவில்லை.

நானா சாகிப் டெங்களே என்னும் ஜமீந்தார் ஒருவர் அவரது அதிர்ஷ்டவசமாக, ஸாயி பாபாவின் பெருமையைத் தற்செயலாகக் கேள்விப்பட்டு, அவரைப் போய்த் தரிசித்தார். அந்த ஜமீந்தார் இரு மங்கையரை மனைவியராகப் பெற்றிருந்தும் மகப்பேறில்லாது வருந்தி வந்தார். பலவித நோன்புகளும் தவங்களும் இருந்தும் பயனில்லாது மனஞ்சலித்திருந்த அவர் பாபாவிடம் தம் குறையை முறையிட்டார். பாபா மனப்பூர்வமாக ஆசீர்வாதஞ் செய்யவே உடனடியாகப் பிள்ளை கலி தீர்ந்தது. ஜமீந்தாரின் மனைவியரில் ஒருவர் கருப்ப முற்று ஆண்மகவைப் பெற்றெடுத்தார். இச்செய்தி ஊரெங்கும் பரவவே, ஜமீந்தாரின் நண்பர்களும் உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் ஸாயி பாபாவைத் திரிசித்து தத்தம் குறைகளைப் போக்கிக் கொள்ள வந்து குவியலாயினர். அப் பக்கத்து ஜில்லா கலெக்டர் ஒருவருடைய காரியதரிசியான நாராயண கோவிந்த சந்தோர்கர் 'நானா' என்பவரும் அவருடைய போலீஸ் ஆர்டர்லி தாஸகணு கணபதிராவ் தத்தாத்ரேஸஹஸ்புரத்தே என்பவரும் 1892-ம் வருஷத்தில் ஸாயி பாபாவை வந்து தரிசித்துச் சென்றனர். பாபாவின் எளிய நிலையும் ஞானவொளி வீசும் சாந்த முகமும் சமநோக்கும் உள்ளத்தூய்மையும் அவர்களுடைய உள்ளங்களை வெகுவாகக் கவர்ந்தன. ஆகவே, அவர்கள் பாபாவிடம் வந்து ஆசிபெற்றுச் சென்றதும், அவரது அருமை பெருமைகளைத் தாங்கள் போகுமிடமெல்லாம் காண்பவர்களிட மெல்லாம் பலப்பட எடுத்துக் கூறினர். இதன் பயனாக, 1908-ம் வருஷ முதல் ஸாயி பாபாவை நாடி

Koviloor Digital Library

ஏராளமான மக்கள் - செல்வந்தர்கள், ஏழைகள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், அரசியல் தலைவர்கள் முதலிய பலவிதமானவர்களும் தரிசித்து அவர் அருள் பெற்றுச் செல்லலாயினர். இவ்விதம் வந்தவர்களில் லோகமான்ய பால கங்காதர திலகர் போன்ற தேசத்தலைவர்களும் இருந்தனர் என்றால் ஆச்சரியப்படக்கூடாது. திலகர் பெரிய அரசியல் வாதி; தேசியத் தலைவர் மட்டுமல்ல; மகா தத்துவ ஞானியுமாவர். அவர் ஆத்மவிசாரணை செய்து வந்தவர். ஜனசமூகமும் தேசமும் சுதந்திரம் பெற்று விளங்கவேண்டும் என்று எண்ணி அவர் பாடுபட்டு வந்தது போலவே, ஆன்ம சுதந்திரத்துக்காகவும் அரும்பாடு பட்டு வந்தவர். கிருஷ்ணபகவான் குருக்ஷேத்திர யுத்தத்தில் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதைக்கு திலகர் ஆங்கிலத்தில் ஒரு வியாக்கியானம் எழுதி, 'கீதா இரகசியம்' என்ற பெயரோடு வெளியிட்டிருப்பதிலிருந்து அவரது தத்துவ சாஸ்திர முதிர்ச்சியை அறிந்து கொள்ளலாம். அத்தகைய மகான்கூட நம் ஸாயி பாபாவை வந்து தரிசித்து ஆசி பெற்று சென்றாரென்றால் பாபாவின் பெருமையை அளவிட முடியுமோ!

இவ்விதம் கல்வி, தகுதி, செல்வம் ஆகியவைகளில் சிறந்த பெரியோர்களும், சமஸ்தானாதிபதிகளும், ரெவினியூ கமிஷனர் ஸர் ஜார்ஜ் ஸேமக்கர்டிஸ் போன்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பாபாவைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்று வருகையில், ஒரு சிலர் ஸாயி பாபாவின் இயற்கைப் பண்புகளையும், செயல்களையும் ஆராய்ந்து பார்க்கலாயினர். இவ்வளவு தூரம் மக்களைக் கவர்ச்சி செய்து தம்மிடம் இழுக்கக்கூடிய ஒரு பெருஞ் சக்தி பாபாவிடம் என்ன இருக்கிறதென்று அதிசயித்துப் பரிசீலனை செய்யலாயினர். ஆனால், அவர்கள் கண்டறிந்ததென்ன? ஒன்றுமில்லை. இவர்கள் எவ்வகையாகவோ நுணுகி நுணுகியாராய்ந்து பாபாவிடம் அமைந்துள்ள அற்புத சக்தியின் இரகசியத்தையும் தத்துவத்தையும் ஒரு சிறிதும் கண்டறிய முடியவில்லை. பாபாவின் மகிமையும் அற்புத சக்தியும் அவர்களது ஆராய்ச்சிக்கு அடங்கியனவாக இல்லை.

Koviloor Digital Library

ஞானிகள் பெருமை அறிவதற்கு எளிதோ! நவில்வதற்குத் தான் எளிதோ!

பாபாவை யடுத்து இகலோக நன்மையைப் பெற்று அன்பு பூண்டு வந்தவர்களில் ஸ்ரீ தாமோதர ஸாவல்ராம் ராஸனே என்பவரும் ஒருவர். இவர் பூனாவில் வாழும் ஒரு வளையல் வியாபாரி. இவர் இரு மங்கையரை மனைவியராகப் பெற்றிருந்தும் மக்கட் பேறு வாய்க்கவில்லை. இலக்கினத்துக்கு ஐந்தாவது இடத்தில் கேது இருப்பதால் இவருக்கு இப்பிறப்பில் பிள்ளையே பிறக்காது என்று ஜோஸியர்கள் சொல்லிவிட்டனர். இதனால் அவர் மனமுடைந்து வாழ்க்கையிலேயே விரக்தி கொண்டவராயிருந்தார். ஆனாலும், அவர் பாபாவிடங் கொண்டுள்ள பக்தி விசுவாசத்தை நெகிழ விடாமல் அடிக்கடி போய் அவரைத் தரிசித்து வந்தார்.

இந்நிலையில் ஒருநாள் ஸாயி பாபா தமது மசூதியில் வந்திருந்தவர்களுக் கெல்லாம் மாம்பழங்கள் வழங்கினார். எல்லோருக்கும் வழங்கிவிட்டு, எட்டு மாம்பழங்களை மட்டுந் தனியாக வைத்து, இவை தாமியாவுக்கு என்று சொன்னார். தாமோதர ராஸனேயை, பாபா தாமியா என அழைப்பது வழக்கம். ஆனால் இவ்விதம் பாபா எடுத்து வைத்த பழங்களில் நான்கைச் சிறுவர்கள் சிலர் களவாடி விட்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் தாமோதர ராஸனே பாபாவைத் தரிசிக்க வந்தார். உடனே பாபா களவு போனது போக எஞ்சியிருந்த நான்கு மாம்பழங்களைத் தாமோதரரிடந் தந்து இவைகளை அவரது இளைய மனைவி அருந்தும்படி கட்டளையிட்டார். இப்பழங்களை அவள் உண்டால் கூடிய சீக்கிரம் கர்ப்பமுற்றுக் குழந்தை பெறுவாள் என்று பாபா உறுதி கூறினார். அத்துடனில்லாது, பாபா தாமோதரருக்கு இளைய மனைவி வாயிலாக எட்டு குழந்தைகள் முறையே உண்டாகும் என்றும், முதலிரண்டு குழந்தைகளும் ஆண்களாய்ப் பிறக்குமென்றும் தீர்க்க தரிசனத்துடன் சொன்னார். அது மட்டுமா! அவ்விரு ஆண் குழந்தைகளுக்கும் தௌலத்ஷா, தானுஷா

5653
Koviloor Digital Library

என்று முறையே பெயர் வைக்கவேண்டு மென்றுங் கூறிப் பின்னால் பிறக்கப்போகும் பிள்ளைகளுக்கு முன்பே பெயர் சூட்டிக் கொடுத்தார். இதிலிருந்து பாபா எவ்வளவு தெளிந்த ஞான திருஷ்டியுடையவரா யிருந்தார்; தாம் சொல்வது பலிக்குமோ பலிக்காதோ என்று சிறிதுஞ் சந்தேகங்கொள்ளாது நிச்சய புத்தி வாய்ந்தவரா யிருந்தார் என்று தெரிந்து கொள்ளலாம்.

பாபா கூறிய விதமே, தாமோதர ராஸனே மாம் பழங்களை அருந்தக் கொடுத்த ஒரு ஆண்டிற்குள் இளைய மனைவி கர்ப்பமுற்று, ஆண் மகவை யீன்றெடுத்தாள். அதன் பிறகு முறையே ஏழு குழந்தைகள் பிறந்தன. அவற்றில் நான்கு குழந்தைகள் மரணமடைந்து விட்டன. பாபா சொல்லியது சொன்னபடியே பலித்ததையும், தமது நீண்ட நாளைய பிள்ளைக் கலி தீர்ந்ததையும் கண்டு, தாமோதர ராஸனே எவ்வளவு பெருமகிழ்ச்சி யுற்றிருப்பார் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஔரங்கபாத் கர் என்பவர் பாபாவின் மற்றொரு பரம பக்தர். அவருக்கு விவாகமாகி 27 ஆண்டுகளாகியும் பிள்ளையில்லை. ஔரங்கபாத் தம்பதிகளுக்கு இனி பிள்ளை பிறக்காது என்று வைத்தியர்களும் மற்றவர்களும் தீர்மானித்து விட்டனர். அவர்களுக்கு மலட்டுத் தன்மை யிருப்பதால்தான் எவ்வளவோ செய்தும் குழந்தை பிறக்க வில்லை என்றும் பிறர் அபிப்பிராயப்பட்டனர். இவ்விதம் நம்பிக்கையெல்லாம் அற்றுப்போன சமயத்தில் ஸ்ரீ மாதவ ராவ் தேச பாண்டே என்பவர் பாபாவின் அற்புதச் சக்தியைக்கூறி, ஔரங்கபாத்தைப் பாபாவிடம் சிபார்சு செய்து அனுப்பினர். அவ்விதமே ஔரங்கபாத் ஷிர்டிக்குப்போய் பாபாவிடம் தம் குறையை முறையிட்டுக் கொண்டார். பாபா ஒரு வருஷத்திற்குள் ஒரு ஆண் மகவு பிறந்து அவர் குறை நிவர்த்தியாகும் என்று தேறுதல் கூறினர். அதன்படியே ஔரங்கபாத்துக்கு ஒரு வருஷத்திற்கெல்லாம் புத்திரனொருவன் பிறந்து மகிழ்ச்சி யுண்டுபண்ணினான்.

அக்கல்கோட் என்னும் ஊரில் ஸபத்நேகர் என்றொரு வக்கீல் இருந்தார். அவர் இளமையில் பார்ப்பனவப்

Koviloor Digital Library

பற்றி அலட்சியமாக நினைத்துப் பலவிதமாகப் பேசி ஏள னஞ் செய்து வந்தார். அப்பேர்ப்பட்டவருக்கு இருந்த ஒரே மகன் சிறிதும் எதிர்பாராத வகையில் மரணமடைந் தான். இதனால் மனமுடைந்த அவ்வக்கீல் தாம் பாபா வைப்பற்றிப் பரிகாசமாகப் பேசிய அபசாரத்துக்கு இது தண்டனையோ எனக் கருதி, அதற்குப் பரிகாரந் தேடிக் கொள்ள ஷிர்டிக்கு விஜயஞ் செய்தார். தம்மைச் சரண டைந்த அவ்வக்கீலிடம் பாபா முகங்கொடுத்துப் பேசாது கடுகடுப்பாகவே இருந்தார்.

எனவே, அவ்வக்கீல் மனஞ் சோர்ந்து தம்மூருக்குத் திரும்பினார். இது நிகழ்ந்து ஓராண்டுக்குப் பின்னர் பாபா மேற்படி வக்கீலின் மனைவியினுடைய கனவில் தோன்றி, கணவருடன் ஷிர்டிக்கு வருமாறு கட்டளை யிட்டார். அதன்படியே வக்கில் தம்பதிகள் ஷிர்டிக்கு வந்து பாபாவை வணங்கினார். பாபா வக்கிலை நோக்கி, அவர் வாழ்க்கையில் நேர்ந்த கஷ்ட நஷ்டங்களையும் சில முக்கிய நிகழ்ச்சிகளையும் முறையாக எடுத்துக் கூறினார். வக்கில் பாபாவின் ஞானதிருஷ்டியை யறிந்து அதிசயித்தார். கடைசியாக, பாபா, இறந்துபோன மகனுக்காக வருந்தி யிருக்க வேண்டாமென்றும், அவனையே மீண்டும் இதே தாய் வயிற்றில் பிறக்கும்படி செய்வதாகவும் கூறினார். பாபா வாக்குறுதி யளித்தபடியே அடுத்த வருஷம் அவ் வக்கீல் தம்பதிகளுக்கு ஒரு ஆண் குழந்தை உதித்தது. இதனால் பெற்றோர்க்குண்டான சந்தோஷத்தைச் சொல் லவும் முடியுமோ! கண்ணிழந்தவன் மீண்டும் பார்வை பெற்றால் எவ்விதம் பெருமகிழ்ச்சி கொள்வானே, அது போலவே, அவர்கள் அளவிலா ஆனந்தமடைந்தனர்.

4. குழந்தைகளுக்கு உற்ற தோழர்

இவ்விதம் ஸாயி பாபா தம்மை நேரில் வந்து தரி சித்து குறையிருப்பவர்களுக்குக் கருணை புரிந்து வந்தது போலவே ஷிர்டிக்கு வரமுடியாது தாங்கள் இருந்த இடத்திலிருந்தே பாபாவை நினைத்துத் துதித்தவர்களுக் கும் வேண்டியது வேண்டியவாறே அருள் புரிந்து வந்

Koviloor Digital Library

தார். எல்லாம் வல்ல முழுமுதற் பெருங் கடவுள் மக்களுக்கு ஒன்றாய் உடனாய் வேறாய் இருந்து கருணை பாலித்து வருவதுபோன்றே, ஸாயி பாபாவும் தம் பக்தர்களுக்குத் தோன்றாத்துணையா யிருந்தும் பலவிதமாக உதவி புரிந்து வந்தார்.

ஷிர்டியில் பாபாவின் கருணைக்குப் பாத்திரமான ஒரு பிள்ளை ஒரு சந்து வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஒரு வீடு கட்டத் தோண்டப்பட்டிருந்த ஐந்து அடி ஆழமுடைய ஒரு கடைக்கால் பள்ளத்தில் மழை நீர் நிரம்பி யிருக்கவே, சமதரை யென்று கால் வைத்து முழுகிவிட்டது. அக்குழந்தைக்கோ நீரில் நீந்தவுந் தெரியாது. அச்சமயம் அக்கம் பக்கத்திலும் யாருமில்லை. இந்நிலையில் அது நீரில் மூழ்கியே யிறந்திருக்க வேண்டும். ஆனால் அக்குழந்தை யாதொரு துன்பமுமின்றிப் பள்ளத்தினின்றும் வெளியேறியது. இவ்வதிசய நிகழ்ச்சியை யறிந்து பிறர் கேட்டபோது, அக்குழந்தை தான் குழியில் விழுந்து நீரில் மூழ்கியதும், பாபா தன் முன் தோன்றி, ஒரு புறத்தில் வெட்டப்பட்டிருந்த படிகளைக் காட்டியதாயும், அப்படிக்கட்டுகளின் வழியாகவே தான் ஏறி வந்ததாயும் கூறியது.

இவ்விதமே, மூன்று வயதுள்ள மற்றொரு பெண் மகவு ஒரு நாள் ஒரு கிணற்றில் தவறி விழுந்து விட்டது. இதை யறிந்து அக்கம் பக்கத்திலுள்ளார் அலறி யோடிப் போய்க் காப்பாற்ற முயன்றனர். ஆனால் அக்குழந்தை காயம் முதலிய துன்பமெதுவுமன்றி, கிணற்றின் ஓரத்தில் நீட்டிக்கொண்டிருந்த ஒரு கல் பாறையைப் பிடித்துக் கொண்டு பயமின்றி யிருந்தது. இதையறிந்து ஆச்சரிய முற்ற அவர்கள் அக்குழந்தையைக் கிணற்றினின்றும் வெளியேற்றி நடந்த தென்னவென்று கேட்டனர். அதற்கு அக்குழந்தை தான் விழுந்தபோது பாபா வந்து தம் கரத்தால் தன்னைத் தாங்கிக்கொண்டதாகத் தெரிவித்தது.

பம்பாயில் பிரபல வக்கிலாகவும் மாகாண சட்டசபை அங்கத்தினராகவும் இருந்த எச். எஸ். தீக்ஷிதர் பி. ஏ.,

Koviloor Digital Library

எல். எல். பி., என்பவர் பாரமார்த்திகத் துறையில் பயிற்சி பெற ஸாயி பாபாவிடம் வந்து இருந்தார். ஒரு நாள் திடீரென பாபா அவரை நோக்கி, "காகா, உனக்கேன் அந்தக் கவலை? பொறுப்பெல்லாம் என்னுடையது" என்று கூறினார். பாபா எதற்காக இவ்விதஞ் சொல்கிறார் என்று தெரியாது தீக்ஷிதர் விழித்தார். ஆனால் அவர் ஒன்றும் பாபாவைக் கேளாது அவர் கூறியதை ஆமோதித்து விட்டுப் பேசாதிருந்தார்.

இது நிகழ்ந்து சிலநாட் கழித்து, தீக்ஷிதர் தம் ஊருக்குப் போனார். உடனே அவர் மனைவி, ஆறு வயதுள்ள தம் மகள் விளையாட்டுச் சாமான்கள் நிறைந்த ஒரு பீரோவின் பக்கத்தில் விளையாடிக்கொண் டிருந்தபோது, அது அக்குழந்தையின்மீது விழுந்து விட்டதென்றும், இதனால், அச்சிறுமி கையிலணிந்திருந்த சில கண்ணாடி வளையல்கள் உடைந்ததே யொழிய, வேறு தீங்கொன்றும் நேரவில்லை யென்றும், விழுந்த பீரோவின் பளு முழுவதையும் யாரோ தாங்கி மெள்ளக் கீழே விட்டதாகவும், விளையாட்டுச் சாமான்கள் முழுவதும் தனக்கு அப்பால் வைக்கப்பட்டதாகவும் தெரிந்ததென்று அச்சிறுமி கூறினாளென்றும் வியப்புடனும் மகிழ்ச்சியுடனுந் தெரிவித்தாள். இச்சம்பவம் நிகழ்ந்த தினத்தைக் கவனித்தபோது, பாபா தமக்குத் தேறுதல் கூறிய தினமாக இருந்ததை யறிந்து, தீக்ஷிதர் பாபா அன்று கூறிய மொழியின் முழுப்பொருளை யுணர்ந்து தம் மகளை விபத்தினின்றும் காத்த பாபாவைத் துதித்தார்.

பாபாவுக்குப் பக்தர்களாக, பம்பாயில் ஒரு மாதும் அவள் குமாரனும் இருந்தனர். பாபா ஒரு நாள் காலையில் அவர்களைக் கண்டு, அன்று பகல் இரண்டு மணிக்குத் தம் மசூதிக்கு வந்துவிட வேண்டுமென்று தெரிவித்தார். அவ்விதமே அவர்கள் வந்து விட்டனர். பாபா மகனை மட்டும் தமக்கு அருகிலுள்ள ஒரு பாயில் அமரும்படி செய்து, தமது அனுமதியின்றி அவ்விடத்தினின்றுஞ் செல்லக் கூடாதென்று கட்டளையிட்டார். அவ்வாறே இருக்கையில்

Koviloor Digital Library

மூன்று மணிக்கு நலைவிரி கோலமாயுள்ள கோர ரூபமுள்ள பெண்ணுருவமொன்று மதில் தாண்டி மசூதிக்குள் வந்து அச்சிறுவனை யணுகி அவனைக் கொண்டுபோகப் போவதாகக் கூறியது. பாபா, அவ்விதஞ் செய்யக்கூடாது என்று முதலில் சாவதானமாகவே கூறினர். அவ்வுருவம் அதைக் கேளாது பிடிவாதமாய் அச்சிறுவனைப் பிடிக்க முயன்றது. எனவே, பாபா எழுந்து தம் காலால் அவ்வுருவத்தை உதைத்துத் தள்ளினர். உடனே அது ஊளையிட்டுக்கொண்டு ஓடி யொளித்தது. பின்னர், பாபா அச்சிறுவனின் தாயை நோக்கி, வந்த பெண்ணுருவம் வாந்திபேதி யம்மையென்றும், அதனிடமிருந்து காப்பாற்றியதால்தான் பையனுக்குக் காலரா அபாயம் நீங்கிய தென்றுங் கூறினர். அக்காலரா தேவதையைப் பார்த்ததனுல் அச்சிறுவன் செயலற்று வாயடைத்துப்போ யிருந்தான்; ஆதலால், பாபா கூறிய தகவலை அவனுல் உணர்ந்து கொள்ள முடியவில்லை. பாபா அவனை அன்புடன் தடவிக் கொடுத்து ஆஸ்வாசப்படுத்திய பின்னரே, அவன் பழைய உணர்வைப் பெற்ருன்.

ஏசு கிறிஸ்து பாவிகளுடைய பாவத்தைப் போக்குவதற்காகத் தம் உயிரையே தியாகஞ் செய்தாரல்லவா! அது போல, நம் பாபாவும், தம் பக்தர்களுடையவும், பிறருடையவும் நோய்களையும் துன்பங்களையும் போக்குவதற்காக-அவைகளால் அவர்களுக்குத் தீங்கு நேராதிருப்பதற்காக—அவைகளைத் தாமே ஏற்றுக்கொண்டார் என்ருல், அவர் மக்கள் பால் வைத்திருந்த தயையை என்னென்பது! திவான் பகதூர் ஜி. எஸ். கபர்தே என்பாரும் அவரது மனைவி மக்களும், 1911—12-ஆண்டுகளில் சில மாதகாலம் ஷிர்டியில் வசித்து வந்தார்கள். அச்சமயம் ஷிர்டியில் எவ்விதமோ பிளேக் உண்டாகியது. இது பரவி, கபர்தேயின் குமாரர்களில் ஒருவனைப் பீடிப்பதற்கு அறிகுறியாக முதலில் சுரங் கண்டது. கபர்தேயின் மனைவியார் மகனுக்கு நேர்ந்திருக்கும் நோயின் தன்மையை யறிந்து பயந்து, ஷிர்டியிலிருந்து புறப்பட்டுச் செல்லத் தீர்மானித்தாள். இவளது உள்ளக் கருத்தை யுணர்ந்த பாபா,

Koviloor Digital Library

விபத்தொன்றும் நேராது என்று கூடமாகக் கூறினார். ஆனால் அவ்வம்மை அவ்விடத்தினின்றும் போய்விட வேண்டு மென்றே துடியாய்த் துடித்தாள். எனவே, பாபா உண்மை நிலையை வெளிப்படுத்த விரும்பித் தம் உடம்பில் ஏற்பட்டிருக்கும் சில பெரிய பிளேக் கட்டிகளைக் காட்டினார். "நான் உங்களுக்காக இந்தத் துன்பத்தை அனுபவித்து வருகிறேன். உன் பிள்ளையைக் காப்பாற்ற அவனுக்கு வந்த பிளேக்கை நான் ஏற்றுக்கொண்டிருப்பதை இப்போதாயினும் அறிகிறாயா?" என்று கேட்டார். அதன் பிறகே அவ்வம்மை மன அமைதி பெற்றாள். சிறுவன் சுரத்தினின்றும் சீக்கிரங் குணமுற்றான். பாபாவும் உடல் நலமுற்றார்.

இது போன்றே புனித நகரில் வாழ்ந்துவந்த ஒரு மானேஜருடைய மனைவிக்கும் நன்மை புரிந்தார். அந்த அம்மாளுக்குக் கண்களில் வலியேற்பட்டுச் சதா நீர் கொட்டிக்கொண் டிருந்தது. பாபா அவ்வம்மையாரை நோக்கினார். உடனே அவரது கண்வலியும் நீங்கியது. கண்ணீரும் நின்றது. ஆனால், பாபாவின் கண்களிலிருந்து நீர் வடியலாயிற்று.

5. பக்தர்களுக்குப் பரிந்து உதவல்

சாந்தாராம் பலவந்த நாச்னே என்பவர் பாபாவின் மற்றொரு பக்தர். அவர் 1913 ம் ஆண்டில் ஒரு நாள் பாபாவைத் தரிசனஞ் செய்ய வந்தார். அச்சமயம் பாபா பேச்சோடு பேச்சாக "பைத்தியக்காரர்களை நம்பக் கூடாது" என்று பொதுப்படையாகக் கூறி நாச்னேயை எச்சரிக்கை செய்தார். ஆனால் அவர் அதைக் கவனிக்க வில்லை.

நாச்னே தம்மூருக்குப் போய்ச் சில நாளிருக்கும். ஒரு நாள் காலை அவர் தம் வீட்டில் பாபா படத்துக்கும் மற்றுஞ் சில விக்கிரகங்களுக்கும் பூசை செய்துகொண் டிருந்தார். அவர் வீட்டுப் பக்கமாக வந்த ஒரு பைத்தியக் காரன் திடீரெனப் பூஜையறையில் நுழைந்து அவருடைய

Koviloor Digital Library

கழுத்தைத் தன் கைகளால் பிடித்து அழுத்தியவாறு இரத்தத்தைக் குடிக்கப்போவதாகக் கூறித் தொண்டையைக் கடிக்க முயன்றான். எதிர்பாராத விபத்தைக் கண்ட நாச்னே பைத்தியக்காரனுடைய பிடியினின்றும் விடுபட முயன்றாராயினும் முடியாமல் மூர்ச்சையானார். இதற்குள் வீட்டிலுள்ளவர்கள் இதையறிந்து ஓடோடி வந்து பைத்தியக்காரனை விலக்கி அவரைத் தப்புவித்தனர்.

இச்சம்பவம் நிகழ்ந்ததற்குப் பிறகு, சாந்தாராம் பலவந்த நாச்னே ஸாயி பாபாவைத் தரிசிக்கச் சென்றார். பாபா நாச்னேயின் யோகக்ஷேமங்களை லோகாபிராமமாக விசாரித்தபின், உடனிருந்த அண்ணா சிஞ்சணீகர் என்பவரை நோக்கி, "அடே அண்ணா, சமாசாரஞ் தெரியுமோ! சில நாட்களுக்கு முன் நாச்னே ஒரு பைத்தியக்காரனிடம் அகப்பட்டுக்கொண்டான். நான் சிறிது தாமதித்திருந்தால் இவன் உயிரை இழந்திருப்பான். அதற்குள் நான் இவனை அந்தப் பைத்தியக்காரன் பிடியிலிருந்து விலக்கிக் காப்பாற்றினேன். என்ன செய்வது? என் மக்களை நான் காப்பாற்றாவிட்டால் வேறு யார் காப்பாற்றுவார்?" என்று கூறினார். அப்போதே நாச்னேவுக்குத் தாம் பைத்தியக்காரன் பிடியினின்றுந் தப்பியவிதந் தெரிந்தது. ஆகவே, அவர் முன்னையினும் பாபாவிடம் பக்தி செலுத்தலானார்.

நானா சாகிப் சந்தோர்கர் என்பவர் பாபாவின் ஆத்ம சக்தியையும் பெருமையையும் நன்கு அறிந்தவர். அவரே தமது குரு, தெய்வம் என்றெல்லாம் கருதிப் பூசித்து வருபவர். அத்தகைய அன்பர் ஒரு நாள் பூனா பக்கமாக டாங்கா வண்டி யொன்றில் சவாரி செய்து கொண்டிருந்தார். இவ்விதம் போய்க்கொண்டிருக்கையில், திடீரென குதிரைகள் மருண்டு பின் வாங்கி வண்டியைக் குப்புறக் கவிழ்த்து விட்டன. நானா சாகிபும் அவரது நண்பரும் கீழே உருண்டு விழுந்தனர். இதே சமயத்தில் ஷிர்டியிலிருந்த பாபா தம்மைச் சூழ்ந்திருந்த பக்தர்களிடம், "ஐயோ! நானாவுக்குப் பிராணாபத்து ஏற்படும் போலிருக்கிறதே! ஆனால், அவனுக்கு அவ்விதத்

Koviloor Digital Library

துர்க்கதி யேற்பட நான் பார்த்துக்கொண்டிருப்பேனா!" என்று பரிவோடு கூறினார்.

பாபா கூறியபடியே அவரது கருணையால் வண்டியினின்றும் உருண்டு விழுந்த நானாவும் அவரது நண்பரும் யாதொரு சிறு காயமுமின்றித் தப்பினர். அவர்கள் தாங்கள் விபத்தினின்றுந் தப்பியது அதிர்ஷ்டவசமாக நேர்ந்ததென்று கருதினார்கள். நானா சாகிப் இதன் பின்னர் பாபாவைத் தரிசிக்கப் போனபோது, பாபாவின் பக்தர்கள் முன்னொரு நாள் இவரைப்பற்றிக் கூறியதைத் தெரிவித்தனர். அப்போது தான் அவருக்குத் தாங்கள் விபத்தினின்றுந் தப்பியது பாபாவின் கருணையாலென்று தெரிந்தது.

நானா சாகிபுக்கு மீனாத்தாயி என்றொரு மகளுண்டு. அவளது முதல் பிரசவம் மிகப் பயங்கரத் தன்மை வாய்ந்ததாயிருந்தது. அவள் வாழ்ந்து வந்த ஜாம்னெர் என்ற ஊர் ஒரு குக்கிராமமாகும். ஜல்காம் என்ற ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அதற்கு 30 மைல் தூரமாகும். ஆகவே, வைத்தியர் உதவி பெறக்கூட முடியவில்லை. மகள் அனுபவிக்கும் கொடிய பிரசவ வேதனையைக் கண்டு நானா சாகிபின் மனம் துடிதுடித்ததாயினும், பாபாவின் மீது பாரத்தைப் போட்டு தம் பூஜா காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

தம் பக்தர்களின் இன்ப துன்பங்களை யறிந்து உதவி புரிவதிலேயே கருத்துடையரா யிருந்த ஸாயி பாபா, நானா சாகிபின் மகளுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்தை உணர்ந்து, ஒரு கோஸாவியிடம் சிறிது விபூதியைத் தந்து ஜாம்னெருக்கு சென்று நானாவிடம் கொடுக்கும்படியும், அவர் மகளுக்கு அளிக்கும்படியும் தெரிவித்து அனுப்பினார். ரயிலுக்குத் தான் இரண்டு ரூபாய் இருக்கிறதென்றும், ஸ்டேஷனிலிருந்து ஜாம்னெருக்குப் போகப் பணமில்லை யென்றுங் கோஸாவி தெரிவித்தார். 'கடவுள் தருவார்; போய்வா' என்றார் பாபா. அதன்படியே கோஸாவி ஜாம்னெருக்குப் பிரயாணமானார். ரயி

Koviloor Digital Library

லில் கோஸாவி ஜல்காம் ஸ்டேஷனை யடைந்ததும், டவாலி சேவக னொருவன் அவரை எதிர்கொண்டு அழைத்து நானா சாகிப் அனுப்பியதாகக் கூறி டாங்கா வண்டி யொன்றில் ஏற்றிச் சென்றான்.

கடைசியாக, கோஸாவி நானா சாகிபைக் கண்டு பாபா கொடுத்த விபூதியை அவரிடந் தந்து அவர் கூறி யனுப்பிய செய்தியையுந் தெரிவித்தார். நானா சாகிப் மகிழ்ச்சிகொண்டு தம் மகளுக்குப் பாபாவின் பிரஸாத மான விபூதியைப் பூசினார். உடனே அவளுக்குக் கஷ்டம் நீங்கி ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் சுகப் பிரசவ மாயிற்று. இதன் பின்னர் கோஸாவி டவாலி சேவக னொருவன் வந்து தம்மை டாங்காவில் ஏற்றி வந்ததைத் தெரிவித்து, "நான் வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார். நானா சாகிப் ஆச்சரியமுற்று, "நான் வண்டியையோ ஆளையோ அனுப்பவில்லையே? ஷிர்டியிலிருந்து யாரும் வருவதாக எனக்குத் தெரியவுந் தெரியாது; எதிர்பார்க்கவுமில்லை" என்று பதிலளித்தார். இருவரும் பேராச்சரியமுற்று, இது பாபாவின் செயல் தான் என்று உணர்ந்து, பாபாவைப் போற்றினர்.

ஸாயி பாபாவை அணுகியவர்களெல்லாம் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் சுவர்க்க போகத்தையும் விட இக லோகப் பயன்களைத்தான் பெரிதும் வேண்டி நின்றனர். குடும்பக் கஷ்டங்களைப் போக்கவேண்டுமென்றும், உத்தி யோகம் கிடைக்கச் செய்யவேண்டுமென்றும் உத்தியோ கத்தில் உயர்வும் சம்பள உயர்வும் ஏற்படச் செய்ய வேண்டுமென்றும், வயிறார உண்பதற்கு உணவு கிடைக் கச் செய்யவேண்டுமென்றும், கோர்ட்டு விவகாரங்களில் ஜெயம் ஏற்படச் செய்யவேண்டுமென்றும், நோய்களைப் போக்கியருள வேண்டுமென்றும் செல்வமும், செல்வாக் கும் ஏற்படச் செய்யவேண்டுமென்றும், பரீக்ஷையில் தேற வேண்டுமென்றும் பல விதமாகப் பலரும் குறையிரந்து அனுகூலம் பெற்றிருக்கின்றனர். பாபா தம்மை நாடி வருபவர்களின் குறைமுறைகளை யெல்லாங் கருணையோடு

Koviloor Digital Library

கேட்டுத் தமது ஆத்ம சக்தியால் அவர்களுக்கு இஷ்ட ஸித்தியுண்டாகச் செய்திருக்கிறார். தாமும் கடவுளும் ஒன்றே என்ற பாவனைகொண்ட மகானால் ஆகாததும் ஒன்றுண்டோ!

ஷிர்டியிலும் அதன் சுற்றுப் புறத்திலுமுள்ள ஏழை மக்கள் ஆயிரக்கணக்கான பேர் பாபாவினால் வயிறார உணவு உண்டு சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வந்தனர். பொழுது விடிந்தால் வயிற்றுப்பாட்டை எப்படித் தீர்ப்பது என்று ஏங்கி வந்த பரம ஏழைகளுக்குப் பாபா தாராளமாகச் சோறு அளித்துவந்தார். அவரது பக்தர்கள் கொண்டு வந்து கொடுக்கும் பக்ஷணங்களையும் ஆகார வகைகளையும் பழ வகைகளையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதுடன் நில்லாது, அவையொன்றும் இல்லாத சமயத்திலுங் கூட, தாம் போய்ப் பிச்சையெடுத்து வந்தாயினும், அவர்களுக்கு உணவளித்துப் பசியாற்றி வந்தார். மனிதர்களுக்கு மட்டுமல்லாது, நாய் காக்கை முதலிய பிராணிகளுக்கும் உணவளித்து மகிழ்வார்.

ஸாயி பாபாவுக்கு, 'வெங்குசா' என்ற பெரியாரொருவர் குருவாக வாய்த்திருந்தார். பாபா அவருடன் இருந்து வருகையில் சில போக்கிரிகள் இவர்மீது மாற்சரியங் கொண்டு கற்களை யெறியலாயினர். குரு சிஷ்யன் உயிரைக் காப்பாற்றக் கருதி முன்வந்து அவரை மறைத்துக்கொண்டு நின்று அக்கல்லடிகளைத் தாம் தாங்கிக் கொண்டார். இதன்பயனாக அவர் உயிர் இழக்க வேண்டியதாயிற்று. சிஷ்யனைக் காக்கத் தம் உயிரையே ஈந்த ஒப்பற்ற குருவின் தியாகத்தைப் பின்பற்றியே பாபாவும் பிறர் நோயையும் துன்பத்தையும் தாம் ஏற்றுக் கொள்ளும் பெருநிலையை யடைந்தாரென்றால் அது உயர்வு நவிற்சியாகாது. பாபா தம்மையே முழுதும் நம்பியுள்ள பக்தர்களுக்குத் தம் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தார். "என்னிடம் எவனொருவன் உண்மையான அன்புவைத்து உறுதியான நம்பிக்கை கொண்டி

Koviloor Digital Library

ருக்கிருனே அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் யாதொரு பயமுமில்லை; என்னைச் சதா நினைத்து, 'உங்களைத் தவிர கதி வேறில்லை' என்று தஞ்சமடைகிறவர்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். என் தலையைக் கொடுத்தாயினும் அவர்களைக் காப்பாற்றுவேன்'' என்று ஒரு சமயம் பாபா வெளிப்படையாகவுங் கூறினார். சமயம் வந்தபோது இவ்வுறுதி மொழியைச் செயலிலும் நடத்திக் காட்டினார்.

பாபா இருந்துவந்த ஷிர்டி மசூதியில் இந்துக்களும் முஸ்லிம்களும் தத்தம் மதாசாரப்படி கடவுளை வழிபட்டு வருகிருர்கள் என்று முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா! மசூதியில் இந்துக்கள் சந்தனம் மலர் முதலியவைகளுடன் பாபாவை வழிபடுவது பெருந்தவறு என்று ஒரு சமயம் முஸ்லிம்கள் கருதலாயினர். ஆகவே அவர்கள் ஒரு கூட்டம் கூடி ஆலோசனை செய்து, தங்கள் மதக் கொள்கைக்கு மாருக இந்துக்கள் செய்து வருவதைத் தாங்கள் பலாத்கார முறையைக் கையாண்டாயினும் தடுத்து நிறுத்தவேண்டுமென்று தீர்மானித்தனர். இதையறிந்த மஹால்ஸாபதி என்ற பக்தர் முஸ்லிம்கள் தீர்மானித்துள்ளபடி நடப்பதாக இருந்தால், கலகமும், அடிதடியும் உயிர்ச்சேதமும் ஏற்படக் கூடுமென்று கருதினார். ஆகவே, அத்தகைய துர்ப்பாக்கிய நிலையைத் தவிர்க்கவேண்டி, அவர் மசூதிக்கு வெளியிலேயே இருந்து கொண்டு பாபாவைப் பூசை புரிந்தார்.

இதையுணர்ந்த பாபா, "அன்பா, உள்ளே வந்து வழக்கம்போல், சந்தனம் மலர்களால் பூசை செய்வாயாக. இதனால் யாதொன்றும் நேராது. அப்படி யார் அடிக்க வருகிருர்கள்; 'பார்ப்போம்'' என்று தைரியங் கூறி யழைத்தார். வெளியே தடிகளோடு வந்திருந்த முஸ்லிம்கள் பாபாவின் அஞ்சாமொழியைக் கேட்டு அசைவற்று நின்று விட்டனர்.

இந்நிகழ்ச்சி நிகழ்ந்து சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், குறுகிய மனோபாவமுடைய சில முஸ்லிம்

Koviloor Digital Library

களிடையே மீண்டும் கலகலப்பு ஏற்பட்டது. தங்கள் இஸ்லாம் மதத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டிய ஸாயி பாபா இந்துக்களால் தூண்டப்பட்டு அவர்களது மதக்கொள்கைகளை அநுஷ்டித்து வருகிறார் என்று அவர்கள் கருதினர். ஆகவே 1914-15 ம் ஆண்டில் மதவெறி கொண்ட மிர்ஜாமன் என்னும் ஒருவன் ஒரு நாள் நடு இரவில் பாபாவை யணுகி, "பாபா உங்களுடன் சாவடியில் உறங்கிக்கொண்டு இருக்கிற இந்துக்கள் அனைவருடைய கழுத்துகளையும் துண்டித்து விடுகிறேன். இவர்கள்தான் உங்களைக் கெடுத்து வருகிறார்கள். எனக்கு அநுமதி தாருங்கள்" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

பாபாவின் பக்கத்தில் படுத்திருந்த இராமசந்திரதர் கட் என்பவர் காதில் இவ்வெறியன் பேச்சு விழவும் விதிர்ப்புற்றார். ஆனால், ஸாயி பாபா சாவதானமாக மிர்ஜாமனை நோக்கி, "குழந்தாய்! இந்துக்கள் தங்கள் மதசம்பிரதாயப்படி என்னை வழிபடுவதில் யாதொரு தவறுமில்லை. எனது பைத்தியமே அவர்களை அவவிதஞ் செய்யச் சொல்லுகிறது. ஆகவே, அவர்கள் கழுத்துகளை அறுப்பதற்குப் பதிலாக, என் கழுத்தை அறுப்பாயாக" என்று கூறினார்.

இதைக்கேட்டு அம்மத வெறியன் ஸ்தம்பித்துப் போய் விட்டான். முஸ்லீம்களும் பாபாவை மகத்தான அவலியா என்று வணங்கி வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட மகானின் கழுத்தைத் துண்டிக்க அவன் மனம் எப்படித் துணியும்? ஆகவே, அவன் கடைசியாக ஒன்றுஞ் செய்யாது தலைகுனிந்தவாறு வெளியே போய் விட்டான்.

இரு ஆண்டுகளுக்குப் பிறகு மற்றொரு அதிசயம் நிகழ்ந்தது. அதாவது முஸ்லிம்களில் ரோகிலா வகுப்பு என்று ஒரு பிரிவுண்டு. அவ்வகுப்பில் முரட்டுத்தனமே உருவான ஒரு வாலிபன்; அவன் சமூக சட்டங்கள், அரசாங்க சட்டங்களையுந் துச்சமாகக் கருதியிருப்பவன். அப்பேர்ப்பட்டவன் ஸாயி பாபாவிடம் அமைந்துள்ள அதி

Koviloor Digital Library

சய சக்தியையும் ஞானத்தையுங் கண்டு பயபக்தியும் சந்தோஷமுங் கொண்டு, அவரை, 'பைகம்பர், அதாவது நபி' என்றே கருதிப் போற்றி வந்தான். ஆனால், பாபா மசூதியில் இந்துக்கள் மேளதாளங்களுடனும் மந்திரகோஷங்களுடனும் தம்மைஆராதித்து வரும்படி அநுமதித்து இஸ்லாம் மத சம்பிரதாயத்தைப் பங்கப்படுத்தி வருகிறாரே என்று ஆயாசங்கொண்டு, அவர்மீது வெறுப்பு அடைந்து அவரைத்தடியால் அடித்துக் கொல்ல முடிவு செய்தான். தான் நினைந்த பாதகச் செயலை நிறைவேற்றச் சமயம் பார்த்து, பாபாவை ஒரு நாள் பின் தொடர்ந்தான். பாபா இவனது சூழ்ச்சியை யறிந்து திரும்பிப் பார்த்து, அப்பாதகனுடைய மணிக்கட்டை தமது விரலால் தொட்டார். உடனே அவ்வெறியன் தளர்ந்து சோர்ந்து கீழே விழுந்தான். பாபா, அவனது கொடுஞ் செயலை மன்னித்துச் சென்றார்.

6. பூத உடல் நீத்தும் புகழ் புரியும் மகான்

இவ்விதம், பாபா இம்மண்ணுலகில் நிலவியிருந்த போது தம் பக்தர்களுக்குத் தக்க சமயங்களில் உதவி புரிந்தது பெரிதல்ல. அவர் இப்பூதவுடலை நீத்துச் சென்ற பிறகும் நுண்ணுடலிலிருந்தும் பக்தர்களுக்கு அருள் புரிந்ததுதான் அதிசயிக்கத் தக்கதாகும்.

1926-27-ம் ஆண்டினிடையே, ஷிர்டியில் ஸாயி பாபாவின் ஜயந்தி ஸ்ரீ ராமநவமி தினத்தன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பக்தர்கள் சிலர் அக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டிருந்துவிட்டுப் பம்பாய்க்குத் திரும்பலாயினர். அவர்கள் ஏறிச்சென்ற ரயில் டாணு ஸ்டேஷனை யடைந்ததும், அக்கூட்டத்திலிருந்த ஒரு பெண்மணி ரயிலை விட்டிறங்கிப் பிளாட்பாரத்தின் ஒரு பக்கத்தில் இருந்த ஒரு குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டு பாத்திரத்துடன் ரயிலில் ஏறலானாள். அதே சமயத்தில் ரயில் புறப்படவே, கால் தவறி ரயிலினடியில் விழுந்துவிட்டாள். இதைக் கண்டு அவளது கணவனும் மற்றவர்களும் திடுக்கிட்டுக் கூச்சலிட்டனர். ரயிலை

நிறுத்தச் சிலர் முயன்றனர். ஆனால், ரயில் வெகுதூரம் போன பிறகே நிற்கலாயிற்று. இதற்குள் விழுந்த பெண்மணி ரயில் சக்கரத்தில் அறைபட்டு இறந்து போயிருப்பாள் என்று அனைவரும் கருதித் துயருற்றனர். ஆனால், அவள் விழுந்த இடத்தில் போய்ப் பார்த்தபோது ஜனங்களுக்கு உண்டான ஆச்சரியம் சொல்லி முடியாது. ஏனென்றால். அம்மங்கை யாதொரு தீங்குமின்றி எழுந்து வந்தாள். அவள் எப்படி தப்பினாள் என்று பிறர் கேட்க அம்மங்கை தான் விழுந்ததும் பீதியுற்றாலும், தன்னைக் காப்பாற்றும்படி பாபாவை நினைத்ததாகவும், உடனே பாபா தன்முன் தோன்றித் தன்னை பிளாட்பார சுவரோரத்தில் தள்ளிப் பிடித்துக்கொண்டதாகவும், அதனாலேயே தான் ரயில் சக்கரங்களில் அறை படாமல் தப்பியதாகவுங் கூறினாள். 'பாபாவின் சக்திதான் என்னே! என்று அனைவரும் வியந்து போற்றினர். இதுபோன்று எத்தனையோ சம்பவங்களில் பாபா தம் பக்தர்களை மேலுலகிலிருந்து வந்து காப்பாற்றியதாகப் பல ரசமான விஷயங்கள் கூறப்படுகின்றன.

ஸாயி பாபா தம் பக்தர்களின் நோய்களைத் தாம் ஏற்று நிவர்த்தி செய்து வந்ததின் பயனாக அவரது உடல் நலிவுறலாயிற்று. "பரோபகாரம் இதம் சரீரம்" என்ற ஆகமமொழிக்கு இலக்கியமாக, பாபா விளங்கி, ஜன சமூகத்துக்கு இடைவிடாது உழைத்து வந்ததனால், அவரது தேகபலம் குறைந்து வந்தது. இதை யுணர்ந்த பாபா தமது பக்தரான ஜி. எஸ். கபர்தே என்பவரை நோக்கி, "சென்ற இரண்டாண்டுகளாக அதாவது ஷிர்டியில் கூட்டம் வரத்தொடங்கின நாள் முதல் எனக்கு உடல் நலமில்லை. ஷிர்டியில் நான் இருக்கும் வரைக்கும் என் பிறப்பிடத்துக்கு (அதாவது இறைவனிடம்) போகும் வரைக்கும் இத்தொல்லை நீங்காது. மேலும், என் உயிரைக் காட்டிலும் என் பக்தர்களின் நலத்தைக் காப்பதிலேயே நான் சிரத்தை கொண்டிருக்கிறேன். மக்கள் சதாகாலமும் என்னிடம் வந்து கொண்டேயிருப்பதால் எனக்கு ஓய்வொழிவில்லை. ஆனால் அதை நான் விலக்க முடியாது"

Koviloor Digital Library

என்று கூறினர். இது 1910-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நடந்தது. அதற்கு அப்புறம் பாபா ஏறக் குறைய எட்டாண்டுகள் இருந்து கடைசியாக 1918-ம் வருஷம் அக்டோபர்மீ 15-ந்தேதி யன்று இப்பூத வுடலை மண்ணில் போட்டுவிட்டு இறைவனின் திருவரு ளைச் சேர்ந்தார்.

ஸாயி பாபா இப்பூவுலகை விட்டுப் போனபின்பே அவரது பெருமையும் தெய்வ சக்தியும் மக்களுக்கு நன்கு புலனாயின. நறுமலர்களை மறைத்து வைத்தாலும் அவற் றின் மணம் வெளிப்பட்டு மக்கள் மனங்களைக் கவர்வது போல், பாபா ஆத்மசக்தியால் செய்த அரும் பெருஞ் செயல்கள் பல பாகங்களிலிருந்த மக்களையும் அவர் வசம் இழுத்தன. ஆதலால், பாபாவின் பெருமையும் புகழும் நாடெங்கும் பரவின. இந்நிலையில் பாபா மறைந்த பிறகு அடங்கிவிட்டதா என்றால், இல்லை; அவர் உயிரோடு இருந்த காலத்தில் ஏற்பட்ட புகழை விட, விண்ணுலகு அடைந்த பின்னர் மிகுந்த புகழ் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணமென்ன வென்றால், பாபா பூத வுடலில் இருந்து வந்த காலத்தில் மக்களுக்கு நல்வழி காட்டியும் அவர்கள் துன்பங்களையும் குறைகளையும் போக்கி வந்தது போலவே, தன்னுடலில் இருக்கும் இக் காலத்திலும் பல அற்புதங்களைச் செய்து தம்மை நினைத் தும் வழிபட்டும் வரும் மக்களுக்கு நன்மை புரிந்து நல் வழி காட்டி வருவதேயாகும்.

ஸாயி பாபா இவ்வுலக வாழ்வை நீத்து ஆண்டு ஆக ஆக, அவரது அற்புத சக்தியும் பெருமையும் அதிக மாகி வருகிறது. வெகுநாள் வரை வடநாட்டுப் பக் கத்திலேயே தெய்வ வொளி வீசி வந்த ஸாயி பாபா சென்ற சில ஆண்டுகளாகத் தென்னாட்டிலும்—நம் தமிழ் நாட்டி லும் தம் சைதன்யத்தை ஒளிர்ச் செய்து வருகிறார். தமிழ் நாட்டில் ஸாயி பாபா பக்தர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றனர். ஸாயி பாபாவை, கலியுகத்தின் கண்கண்ட தெய்வமெனப் பலர் கருதுகின்றனர்.

 Koviloor Digital Library

இத்தகைய மகான் ஸாயி பாபா அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்தரம் இல்லாத நம் தாய் நாட்டுக்கு விடுதலையும், சமூக உரிமை, சமய அறிவு முதலியன இல்லாது அல்லலுற்று வரும் ஜனசமூகத்துக்கு விமோசனமும் உண்டாக அருள் பாலிப்பாராக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

ஸ்ரீ ஸாயி பாபா நாமாவளி — 108

ஓம் ஸ்ரீ ஸாயிநாதாய நம:
" " ஸாயிலக்ஷ்மீநாராயணாய நம:
" " கிருஷ்ணராமசிவமாருத்யாதி ரூபாய நம:
" சேஷ சாயினே நம:
" கோதாவரீதட சிர்டி வாஸினே நம:
" பக்த ஹ்ருதாலயாய நம:
" ஸர்வ ஹ்ருத்வாஸினே நம:
" பூதாவாஸாய நம:
" பூதபவிஷ்யத் பாவ வர்ஜிதாய நம:
" காலாதீதாய நம:
" காலாய நம:
" காலகாலாய நம:
" காலதர்பதமனாய நம:
" ம்ருத்யுஞ்ஜயாய நம:
" அமர்த்யாய நம:
" மர்த்யாபயப்ரதாய நம:
" ஜீவாதாராய நம:
" ஸர்வாதாராய நம:
" பக்தாவன வர்யாய நம:
" பக்தாவன ப்ரதிக்ஞாய நம:
" அன்னவஸ்த்ரதாய நம:
" ஆரோக்யக்ஷேமதாய நம:
" தனமாங்கல்யதாய நம:
ஓம் புத்திஸித்திதாய நம:
" புத்ர மித்ர களத்ர பந்துதாய நம:
" யோகக்ஷேமவஹாய நம:
" ஆபத்பாந்தவாய நம:
" மார்கபந்தவே நம:
" புக்திமுக்திஸ்வர்கா பவர்கதாய நம:
" ப்ரியாய நம:
" ப்ரீதிவர்தனாய நம:
" அந்தர்யாமினே நம:
" ஸச்சிதாத்மனே நம:
" ஆனந்தாய நம:
" ஆனந்ததாய நம:
" பரமேச்வராய நம:
" பரப்ரம்ஹணே நம:
" பரமாத்மனே நம:
" ஞானஸ்வரூபிணே நம:
" ஜகத: பித்ரே நம:
" பக்தானாம் மாத்ரு தாத்ரு பிதாமஹாய நம:
" பக்தாபயப்ரதாய நம:
" பக்தபராதீனாய நம:
" பக்தானுக்ரஹ காதராய நம:
" சரணாகதவத்ஸலாய நம:
" பக்திசக்தி ப்ரதாய நம:
" ஞான வைராக்யதாய நம: